கல்வி

புரட்டாசி — ஐப்பசி 1981

மலர்: 7 ● இதழ்: 5

விலை: ரூபா 1/=

# நான்

உளவியல் ஏடு



## உள்ளே . . .

பக்


| | |
|---|---|
| ஒரு உதவாக்கரை | 3 |
| கலைகளும் கல்வியறிவும் | 4 |
| அறிவும் ஆளுமையும் | 7 |
| கற்றதனாலான | 12 |
| வாசகர் அறிமுகம் | 13 |
| நினைவாற்றல் | 14 |
| சந்துவழி | 20 |
| கேள்வி? பதில்!! | 22 |
| அறிவை வளர்க்க | 23 |
| நாளை வளரும் . . . . | 27 |
| கருத்துக் குவியல் | 31 |
| உள்ளத்தில் உள்ளது | 36 |
| வாசகர் பூங்கா | 39 |



**ஆசிரியர்:**

வின்சன்ற் பற்றிக் O.M.I.

**உதவி:**

ஜான் கார்டோசா

ஜீவா போல்

செலஸ்ரீன்

**அமைப்பு:**

அலோஸியஸ் றேய்

**ஆலோசகர்கள்:**

விக்ரர் குரூஸ் M.A., Ph.D.

பிரக்சீட் அன்ரனி M. A.

முகவரி:

"நான்"

அ. ம. தி. பயிற்சியகம்

அம்பிட்டி.




எமது

அடுத்த

இதழில்

?

(30-ம் பக்கம் பார்க்க)

# ....ஒரு உதவாக்கரை



ஒரு மாணவனைப் பலர் முன்னிலையில், 'மக்கு' என்று ஒரு ஆசிரியர் கூறுகின்றார். அவன் அவமானத்தால் கூனிக் குறுகி நிற்கின்றான். உருவாக்க வேண்டிய ஆகிரியரே அவனை 'உதவாக்கரை' யாக மட்டம் தட்டி விடுகின்றார்; 'உருப்படாதவன்' என்று நெருப்பான வார்த்தைகளைக் கூறி அவனது வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தை ஏற்படுத்தத் தவறி விடுகின்றார். அறிவிற் குறைந்தவர்களை மனம் தளர்வுறச் செய்யாது, ஆர்வமூட்டி, அரவணைத்து, உருப்படுத்தி வாழும் பெற்றோர், பெரியோர், ஆசிரியர்களே எமது சமுதாயத்திற்குத் தேவை. எப்பொழுதும் குறைகளையும் கறைகளையுமே பற்றிப் பேசும் பழக்கம் எம்மிடம் இருந்தால் அது எமது பாமரத்தனத்தையே எடுத்துக்காட்டுகின்றது. குறைகளை நிறைவுபடுத்தும் நோக்குடனேயே காண வேண்டும். அப்படி அவற்றை நிறைவு படுத்தும் தைரியம் எம்மிடம் இல்லை என்றால் குறைகளைப் பற்றிய பேச்சே வேண்டாம். எனவே, அனைவரையும் உற்சாகப்படுத்தி, உயர்ந்த ஒரு சமுதாயத்தை உருவாக்க முழுமூச்சோடு முன்வருவோம். உயர்ந்த இலட்சியங்களை வளர்ப்போம். அனைவர்க்கும் உறுதுணையாக உயர்திணை மாந்தராய் வாழுவோம்.

— ஆசிரியர்.

# கலைகளும் கல்வியறிவும்

வளர்ச்சி, மாற்றம், முன்னேற்றம் என்பவை இன்றைய சமூகத்திலே எம்மை ஊடறுக்கும் வார்த்தைகள். நேற்றைய நியதிகள் இன்று அர்த்தமற்றவையாக்கப் படுகின்றன. நேற்று பின்பற்றப்பட்டு வந்த முறைகள் இன்று கைவிடப்படுகின்றன. இவ்வாறாக இன்றைய சமூகமே முன்னேற்றம் முன்னேற்றம் என்று வளர்ச்சிப் பாதையிலே உழன்று செல்வது கண்கூடு.

விதம் விதமான முன்னேற்றமும் வளர்ச்சியும் கொண்டு உலகம் ஆக்கப் பாதையிலே வீறுநடை போடுகின்றது என்று உள்ளம் பூரிப்படையும் வேளையிலும் இத்தனை அழிவுகள் ஏன் . . . .? எளியோரின் உடமைகள் எரிக்கப்படுகின்றன, எறிகுண்டுகள் உயிரைப்பழி வாங்குகின்றன, நாடுகள் நாடுகளுக்கு எதிராக போர் முழக்கம் பூணுகின்றன. ஏன் . . . .? இதன் அடிப்படை மர்மம் தான் என்னே . . . .?

**விஞ்ஞான தொழில் நுட்ப வளர்ச்சியும் கல்வி வளர்ச்சியும்:**

விஞ்ஞானக்கலை, தொழில்நுட்பக்கலை, அத்தனையும் மின்னொளி வேகத்திலே வளர்ந்து கொண்டிருக்க இன்று மனிதனும் உயர உயரப் பறந்து கொண்டிருக்கிறான். அவனது சிந்தனை அலைகள் அசுர வேகத்தில் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

பல்லாயிரக்கணக்கான மைல்களை ஒருசில நிமிடங்களிலே பறந்து முடிக்கிறான். ஆயிரம் ஆயிரம் மைல் தொலைவிலே வாழும் மக்களை ஒரு சில விநாடிகளிலே தொலைபேசி ஒன்று சேர்க்கின்றது. அயல் நாட்டுச் செய்திகள் ஒரு நொடிப் பொழுதில் அக்கம் பக்கத்து நாடுகளுக்கு அளிக்கப் படுகின்றன. இத்தனையும் கொண்ட இன்றைய பரந்த

உலகு ஒரு சிறிய சமுதாய மாக மாறிவிட்டது என் கின்றான் ஒரு உளவியல் நிபுணன்.

இத்தனையும் வளர்ந்தும் மனித உள்ளங்களிலே அவ னது உணர்வுகள் வளர வில்லையே, ஏன் . . . ? கார ணம், இன்றைய உலகம் விஞ்ஞானம், தொழில்நுட் பம் போன்ற கலைகளின் வளர்ச்சியே கல்வியின் வளர்ச்சி என்று எண்ணுவ தேயாகும். விஞ்ஞானமும், தொழில்நுட்பமும் இந்தப் பரந்த இயந்திர உலகில் மனிதனை அந்த இயந்திரத் தின், 'cog in the wheel', ஒரு பகுதியாக உருவாக்கு கின்றதே ஒழிய அவனை மனிதனாக மனிதப் பண்புக ளோடு வளர்க்கத் தவறி விடுகின்றன, எனவே கலை களோடு சேர்ந்து மனித னின் உள்ளத்திலே மனிதா பிமானங்கள் வளர்க்கப்பட வேண்டுமாயின் அவனுக்குக் கல்வியறிவு இன்றியமையா தது எனவே கலைவளர்ச் சியே கல்விவளர்ச்சி என்று நாம் ஏமாந்து போகக் கூடாது.

**கல்வியறிவும் மானிட மதிப் பீடுகளும்:**

''நியுட்ரன்'' குண்டின் உற்பத்தி இன்றைய முழு உலகையுமே ஒரு நொடிப் பொழுதில் சாம்பலாக்கிவிடு மோ என்ற ஐயத்தினை எத் தனையோ நாட்டவர்களுக்கு உண்டாக்கியுள்ளது. இந் நிலையில், மனித அறிவு வளர்ச்சியடைய வேண்டிய து, விஞ்ஞானத்தையும் தொழில்நுட்பக் கலையை யும் மேலும் வளர்ப்பதற்கு, அல்ல. மாறாக, வளர்ச்சி யின் உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இந்நிலை யை எவ்வாறு சமாளிப்பது என்பதற்கேயாகும். கல்வி யறிவு மனித உள்ளங்களி லே வளர்ந்து மனிதனை மனிதனாகச் சிந்திக்க வை யேல் ஏனைய கலை வளர்ச்சி அத்தனையும் மனிதனை ஆக் கப்பாதையிலே இட்டுச் செல்வதற்குப் பதிலாக அழிவுப்பாதையிலேயே இட் டுச் செல்லும்.

நுட்பகலை வளர்ச்சி மனித உள்ளத்தில் இருந்து அச்சத்தை அகற்றி அவ னைச் சுதந்திரப்பிறவியாக வாழவைக்க வேண்டுமேயா கில், கல்வியறிவு இன்றிய மையாததாகும். எனவே மனிதன் சிந்திப்பதற்கு, அவனது மதிப்பீடுகளை வரை நிரைப்படுத்துவதற்கு, இன் றைய மனிதனுக்கு கல்வி யறிவு வளர்ச்சி அத்தியா வசியமாகும்.

கார்ள் ரோஜர் (Carl Roger). என்பவர் கூறு கின்றார்; "மனித மதிப்பீடு களை மதியாத, மனிதனையும் பொருளாகக் கருதுகிற இப் பரந்த இயந்திர உலகில் வாழ்க்கையோடு இரண்ட றக்கலவாத கல்வி பயனற்ற கல்வி". எனவே உணர்வு கள் அற்ற அறிவு, உண்மை யான அறிவல்ல.

எனவே, இன்றைய மனிதன் பொறுப்புணர்ச்சி யற்றவனாக, ஏனோதானோ என்ற மனோபாவத்துடன் நடமாடும் கொம்பியூட்டர் களாக வாழக்காரணமாக அமைவது மனித மதிப்பீடு களை வளர்க்காத தொழில் நுட்பக்கல்வியேயாகும்.

**கல்வியின் தூய்மைத்தனம்:**

கல்வியின் தூய்மைத் துவத்தையும், அது மனித அபிமானங்களை வளர்த்து, முழு மனிதனாக, முதிர்ச்சி கொண்ட மனிதனாக வாழ வழிவகுப்பதையும் மாண வர்களும் ஆசிரியர்களும், உணர்ந்துகொள்ள வேண் டியது அவசியமாகும்.

வளர்ந்து வரும் உலகில் விஞ்ஞானம், தொழில்நுட் பம் போன்ற கலைகளின் உதவி கொண்டு, மனித னின் நிலையென்ன, அவ னது முடிவுகள் என்ன, அவன் அந்த வளர்ச்சியின் மத்தியிலே என்ன விதமாக, மனிதனாக வாழ வேண்டும் என்பதை எடுத்தியம்புவதே கல்வியின் தூய்மைத்துவ மும், தனித்தன்மையுமா கும்.

எனவே மனிதனை தூய் மையான பாதையிலே இட் டுச்செல்லாத, கல்வி, வாழ வைப்பதற்குப் பதிலாக மாள வைக்கின்ற கல்வி அர்த்தமற்ற கல்வியாகும், இப்பேர்ப்பட்ட கல்வி நா சிப்போர் வேளையிலே மனி த உணர்வுகள் அற்ற முறையிலே நடந்துகொண் ட போலாந்து மகாதேசாதி பதி ஹான்ஸ் ப்ராங்க் (Hans Frank) போன்றோ ரையே உருவாக்கும், என் கின்றார் ஜோர்ஜ் ஸ்டெயி னர் (George Steiner) என்பவர்.

எனவே தூய்மையான கல்வியே இன்றைய உலகி லே இன்றியமையாதது. இதையே வெற்றி வேற்கை யிலே அதி வீரயா பாண்டி யன் கூறுகின்றார்,

"எக்குடி பிறப்பினும்
யாவரே யாயனும்
அக்குடி கற்றோரை
மேல்வரு கென்பர்."

— றெஜி

# அறிவும் ஆளுமையும்

(Knowledge and Personality)

— ஸ்ரனி அன்ரனி —

உலகில் நாளுக்குநாள் வளர்ந்து வரும் விஞ்ஞானமும், நவீன கண்டுபிடிப்புகளும் மனிதன் விசித்திரமானவன், அவனைப்புரிந்துகொள்வதோ கடினம் என்று எமக்கு எடுத்தியம்புகின்றன. கருப்பைக்கு வெளியிலேயும் மனிதன் குழந்தையை உருவாக்குகின்றான். மனிதன் தான் காணும் பருப்பொருளை பகுத்தறிவால் பகுத்தறிய முனைகின்றான்; தன் சிந்தனை சக்தியால் பொருட்களை கூறுபோட்டு அவற்றை முழுமையாக தன் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயல்கின்றான். எத்தகைய படைப்பாயிருந்தாலும் அதனை அறிந்து, புரிந்து தன் சிந்தனை சக்திக்குள் மனிதன் அடக்கிக்கொள்ள முயல்வதில் தப்பில்லை. இவ்விதம் மானிடனின் சிந்தனைசக்தி அவன் நாளாந்தம் பயிலும் கல்வியாலும், அவன் வாழ்வின் அநுபவங்களாலும் வளம் பெறுகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வு எப்பொழுதும் மகிழ்ச்சிகரமானதாகவே அமையவேண்டுமென்று விரும்புவதில் தவறில்லை. ஆனால் அம்மகிழ்ச்சியைக் கண்டடையும் மார்க்கங்களில் ஒருமைப்பாடு நிலவவேண்டும் என்று கூறுவது மனிதனின் தனித்துவத்தையே மறுப்பதாகும். மானிடநிறைவை நோக்கி மனிதன் தன் செயற்பாடுகளை வகுத்து பூரண ஆளுமையுடைய மனிதனாக வாழ முயற்சித்தல் அவசியமாகும். ஒருவனது ஆளுமை, பிறப்புரிமைக் காரணிகளாலும், அவன் சூழலாலும், பிறருடன் அவன் ஏற்படுத்தும் ஆழ்ந்த நட்புறவுகளாலும் உருவாக்கப்படுகின்றன என்று கூறலாம்.

## 1. அறிவும் மானிட உறவுகளும்

உலகில் தோன்றும் ஒவ்வொரு மனிதனும் சமூகத்தைத் தவிர்த்து ஒரு வாழ்க்கையை தனக்கென வகுத்துக் கொள்ளமுடியாது, ஏனெனில் அது மனித இயல்புக்குரிய

தோன்றுன்று. 'நான் என்ற செடி வளர்வதற்கு நீ என்ற நிலம் வேண்டும்'. மாருக மனிதனின் வாழ்க்கையை வளம்படுத்துவது அவன் பிறரோடு கொள்ளும் உறவு களே எனலாம். இவ்விதம் அவன் பிறரோடு கொள் ளும் உறவுகள் சீரானதாக அமையவும், அவனின் சமூக வாழ்வு சிக்கலற்றதாக அமையவும் அவனின் ஆளுமை யின் வளர்ச்சி இன்றியமையாததாகும்.

இளம் பிராயத்திலிருந்தே மனிதனுக்கு எதையும் அறியும் ஆர்வம் உண்டென்பதை நாம் அநுபவத்தி லிருந்து உணரலாம். சிறுபிள்ளைகள் தம் பெற்ருரிடம் தாம் காணும் பொருட்களைப்பற்றி அது ஏன் அப்படி? அது எவ்வாறு உண்டாயிற்று? என்று பல கேள்விக்கணை களைத் தொடுப்பதை நாம் அறிவோம். இவ்விதம் எதை யும் அறியும் ஆர்வம், எதையும் கூறுபோட்டு ஆராயும் தன் மை மனிதனின் அறிவை வளர்க்கின்றன என்பதில் ஐய மில்லை. மனிதனின் பல்வேறு வளர்ச்சி நிலைகளில், பல வற்றை நூல்கள் மூலமும், பிறரிடமிருந்து அறிந்து கொள்ளும்போது அவனின் சிந்தனைசக்தி விரிவடைந்து, பலவற்றை காரணகாரியரீதியாக ஆராய முற்படுகின் ருன். அவன் நாளாந்தம் அறிவை வளர்ப்பதோடு நின்று விடாது, அவனின் ஆளுமையையும் வளர்க்க முயல வேண்டும். இல்லையெனில் அறிவால் ஒரு மனிதன் சமூ கத்தில் சீரான வாழ்க்கையை, பிறரோடு சீரிய ஆழ்ந்த உறவை அநுபவிக்க முடியாது.

சீரிய அறிவு ஒரு மனிதனின் உள்ளத்தை பக்குவப் படுத்தி, உளச்சமநிலையுடைய மனிதனுக வாழ்ந்து, மானிடநிறைவை நோக்கி பயணம் செய்யத் தூண்டு கின்றது. ஒருவனது ஆளுமை இளம்பிராயத்திலிருந்தே அவன் பயிலும் கல்வியாலும், மூத்தோருடைய செய்கை களினுலும், அவனது இளம் அநுபவங்களாலும் உருவாக் கப்படுகின்றது. சிறுவயதில் அன்பு செய்யப்படாத குழந்தைகளின் ஆளுமையின் வளர்ச்சி குன்றியதாக காணப்படும். அறிவையும், அநுபவத்தையும் அடிப்படை யாகக்கொண்டு உருவாகும் ஆளுமையே பூரணத்துவ மடையும் என்பதில் ஐயமில்லை.

மானிட உறவுகள் சீரானதாக அமைய ஒருவனின்

கல்வி அவனது ஆளுமையைச் சிதைக்காதிருக்க வேண்டும்; ஒருவன தன்னை வேறொருவனாக பிறருக்குக் காண்பிக்க முயற்சித்தல் கூடாது. மாறாக அறிவு, அவன் ஆளுமையை நிறைவாக்கி, தன்னம்பிக்கைகொண்ட ஒரு மனிதனுக வாழ அவன் உள்ளத்தைப் பக்குவப்படுத்த வேண்டும். அறிவின் வளர்ச்சிக்கேற்ப, ஒரு தனிப்பட்ட மனிதனின் குறுகிய தனியுலகமும் பரந்ததாகின்றது. ஒருவன் தானும் தன் குடும்பமும் தான் அவனது உலகம் என்ற நிலைமாறி, பிறரோடு உறவுகளை ஏற்படுத்தி அவனது நாளாந்த செயற்பாடுகளை அவனது கல்வியும், அநுபவங்களும் வழிநடத்துதல் அவசியமாகும். மாறாக அறிவு அவன் ஆளுமையைச் சிதைத்து, பிறரோடு ஏற்படுத்தும் உறவுகளை மட்டுப்படுத்தி, சிந்தனையை குறுகியதாக்குமானால் அந்த அறிவால் பயனேதும் இல்லை.

## 2 அநுபவங்களும் அறிவும்

ஒரு மனிதனின் வாழ்க்கைப் பயணம் சாலையைப் போல் நீளமானது; சந்திப்புக்களோ மிக அதிகம் அவன் வாழ்வில் சில சம்பவங்கள் அவன் உள்ளத்தில் நிரந்தரமான வடுக்களை ஏற்படுத்தி விடுகின்றன. சில அவன் வாழ்வில் இன்பகரமான நினைவுகளை விட்டுச் செல்கின்றன. நாளாந்த வாழ்வின் அவன் சந்திக்கும் இன்பங்களும், துன்பங்களும் வாழ்வின் உண்மை நிலையை வெளிப்படுத்துகின்றன. இவை யாவும் அவனது வாழ்க்கையின் அநுபவங்கள் எனலாம்.

அறிவினை, நாம் கற்கும் கல்வி, பிறரிடமிருந்து கற்பவை என்ற குறுகிய வட்டத்தினுள் அடக்கிவிட முடியாது; ஏனெனில் அது ஒரு பரந்த பதமாகும். வெற்றிகளும் தோல்விகளும், தீர்வுகளும் சிக்கல்களும் ஒரு விதத்தில் மனிதனின் அறிவை வளர்க்கின்றன என்றே கூறலாம். அநுபவரீதியாக, ஒரு மனிதன் வாழ்வில் அவன் எதிர் நோக்கும் சவால்களும், பிரச்சினைகளும், அவன் வாழ்வை சின்னாபின்னமாக்கலாம் அல்லது அவன் வாழ்வை வளம்படுத்தலாம். எவ்விதம் ஒருவனுடைய பிரச்சினைகளும், சிக்கல்களும் மனிதன் வாழ்வை மேம்படுத்த முடியும் என்ற கேள்வி எம்முள்ளத்துள் எழலாம். சில

வேளைகளில் ஒருவன் அனுபவிக்கும் துன்பங்களும், சங்கடங்களும் அவனுக்கு உளவேதனையை அளித்தாலும், மதிநுட்பமுள்ள மனிதன் அவற்றின் மூலம் உறுதியான மனப் பாங்கையும் மனத் துணிவையும் பெறுகின்றான் என்றே கூறமுடியும். இத்தகைய கசப்பான அனுபவங்கள் கூட ஒருவிதத்தில் அவன் ஆளுமையை உறுதியாக்கி எதிர் காலத்தில் பிரச்சினைகளை எதிர்நோக்குவதற்கும் உள்ளத்தை பக்குவப்படுத்துகின்றன. வாழ்வின் அநுபவங்கள், மறக்கமுடியாத, நிரந்தரமான, பாடங்களை மனிதனுக்கு புகட்டுகின்றன அனுபவங்களிலிருந்து. மனிதன் ஒன்றில் வாழ்க்கையை மேம்படுத்தலாம் அன்றேல் வாழ்க்கையையே தனக்கே சுமையாக்கிக்கொள்ளலாம், இதன் முடிவு அவனவன் மனநிலையில் தங்கியுள்ளது.

3 சிந்தனைவாதமும் அறிவும்

மனிதனின் சிந்தனைசக்தியே அவனை விலங்குகளில் இருந்து வேறுபடுத்துகின்றது. இச்சிந்தனை சக்தியும், அவனின் அநுபவ அறிவுமே வாழ்வை முன்னேற்றுகின்றன என்பதில் ஐயமில்லை. சிலவேளைகளில் இச்சிந்தனை சக்தி தவறான வழிகளிற்கூட பயன்படுத்தப்படலாம். மனிதன் இலகுவில் வெறும் நம்பிக்கை அடிப்படையில் சில சம்பவங்களை ஏற்றுக்கொள்ள மறுப்பதில் வியப்பில்லை; ஏனெனில் அவன் தனது அனுபவங்களை காரண காரீய ரீதியில் சீர்தூக்கி சில பிரச்சினைகளுக்கு முடிவு தேடுகின்றான். இவ்விதம் எல்லாச் சம்பவங்களுக்கும் அல்லது நிகழ்வுகளையும் காரண-காரிய ரீதியில் ஆராயும் போது, மனித உணர்வுகளுக்கு மதிப்பளிக்க முடியாத நிலைக்கு சில வேளைகளில் தள்ளப்படலாம். உதாரணமா , ஒரு ஏழை பசியால் வாடும்போது, அவனுக்கு உணவளிக்காமல், அவன் ஏன் ஏழ்மையிலுள்ளான் என்று ஆராய முற்படுவதைப் போன்றதாகும். மனிதனுக்கு சிந்தனை சக்தி மட்டுமல்ல அவனது உள்ளத்து உணர்வுகளுமே அவனை உருவாக்குகின்றன. எனவே அதிகமாக காரண காரீய ரீதியாக சிந்திக்கும் மனிதன் பிறரது உளத்தை, உணர்வெழுச்சிகளை மறந்து விடக்கூடியநிலை தோற்றுவிக்கப் படலாம். ஆளுமையின் வளர்ச்சிக்கு சிந்தனைசக்தி இன்றியமையாததாகும் என்

பதை மறுப் பதற்கில்லை. எப்போது ஒரு மனிதன் தன் வாழ்வைப் பற்றி சிந்திக்கின்றானோ, அன்று அவன் வாழ்வை உண்மை நிலையில் சந்திக்கிறான். சிந்திப்பதோடு மட்டும் நிறுத்தி விடாது, பிறரது உணர்வுகளுக்கும் மதிப் பளித்து வாழும்போது அவன் சமூகத்தில் நல்ல உறவு களை ஏற்படுத்திக் கொள்கின்றான்; இதனால் அவனது ஆளுமை மலர்ச்சியடைகின்றது.

எனவே, பயிலும் கல்வியும், அநுபவ அறிவும் மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாதது என் பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இத்தகைய அறிவு தான் ஒருவனின் ஆளுமையை வளர்க்கின்றது; மனித வாழ்வின் நிறைவிற்கு, அறிவு வழிகாட்டுதல் அவசியமா கின்றது. நிறைவான ஆளுமையுடைய மனிதனால் மட் டுமே சமூகத்தை வழி நடத்திச்செல்ல முடியும். எமது அறிவு, எமது வாழ்வை வளம்படுத்தி, முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லும் என்ற நம்பிக்கை எம் வாழ்வின் வெற்றிக்கு படிக்கல்லாக அமைகின்றது.

---

**விதி-மதி** — விதி-மதி இரண்டையும் வெகு அழகாகவும் ஆழ மாகவும் விமர்சித்துள்ள ஜான் கார்டோசாவின் 'உணர்வு கடந்த மனம்' எனும் கட்டுரை என்னை ஆழமாக சிந்திக்க வைத்தது. என்னையே பிரதிபலிப்பது போலிருந்தது இந்தக் கட்டுரை. எஸ். டி. அமலநாதனின் 'சமுதாய மயக்கிகள்' என்ற கட்டுரையும் சுருக்கமாகவும் சுவையாகவும் இருந்தது. நல்ல போன்ற 'வாசகர் பூங்காவை' நீக்கிவிட வேண்டாம். ஆகவே சஞ்சிகையை சீர்தூக்கிப் பார்க்கும் கருவி.

— சுரையா,
புசல்லாவ.

**பொன்விழா** — 'நான்' மலரே நீ மொட்டாகி, இதழ் விரிந்து இன்று மலர்ந்து விட்டாய். உன் பொன் விழாக் கொண்டாட்டத்திலே எனக்கும் பங்கு உண்டல்லவா? வாழ்க உன் பணி, வளர்க உன் சேவை.

— சகாயராணி சோமநாதன்,
தாழங்குடா.

புதுக்கவிதை

# கற்றதனுலான . . . . . .

— மன்ருசியூர் - சு. முரளீதரன் —

கற்றகல்வி
துணையோடு,
விண்ணைச்சாட
புறப்பட்ட - நாம்
சந்தர்ப்பச்
சதிகளால்
மண்ணை
முத்தமிடுகிருேம்!

★

கரைசேரக்
காத்திருக்கும்
மூத்ததுகள்,
கடன்தீர
வழிதேடும்
தந்தையர்கள்-
விடிவுகாண
புறப்பட்ட
பயணம்
முடிந்ததோ
வீதியளப்பில்!

★

பீ.ஏ பீ எஸ்ஸிகள்
'கல்வி' விற்கும்
ரியூட்டரிகளில்,
வாங்கித்தின்ற
க விகள்-
ஜீரணமாகாமலே
கழிகின்றன.

★

காலேச்சந்தையில்,
விலேபோகா
சரக்குகள் - நாம்
ஏழ்மைத்
தீயில்
எண்ணெய்
விடும்,
வரண்டுவிட்ட
வற்ருத
ஜீவநதிகள்

★

ஏட்டைக்
கெடுத்துவிட்ட,
நைட்டின்
தலேவிதிகளாய்
நர்த்தனம்
புரியும் - நாம்
அளவீட்டை
மிஞ்சிய
வரைபுகளாய்
அங்கலாய்க்கின்றேம்.

★

மூன்றும் யுத்த
படை வீரர்கள் - நாம்
சூனியத்தில்
ஒளித்திருக்கும் - எம்
விடிவுகளே
கடன் தரக்
காத்திருக்கிருேம்-
வரும்
வம்சாவழியினருக்கு.

# வாசகர் அறிமுகம்

**பெயர்: M. பாலகிருஷ்ணன்—ஊர்: தெமட்டகொடை—வயது 28**



முதன் முதலாக அவனை எங்கள் ஊரிலுள்ள ஒரு கடையில் தன்னந்தனியாக சந்தித்தேன். அவனின் அடக்கமும் அமைப்பும் என்னை, பார்த்தமாத்திரத்திலேயே கவர்ந்து விட்டது. அவனின் அரவணைப்பு சேரப்பெற்றுல் என் வாழ்வு வேகம் பெறும் என உணர்ந்தேன். எனவே, அவனை என்னவன் ஆக்கிக்கொள்ளும் வேகம் கொண்டேன். ஆனுல் தோல்வி, காரணம் அந்த பொல்லாத கடைக்காரனின் எதிர்ப்புத்தான். ஆனுல் என் வேகம் குறையவில்லை. அவனை கொழும்பு முழுவதும் தேடியலைந்தேன்; ஆனுல் அவனை சந்திக்கவேயில்லை. பின் ஒரு நண்பனின் மூலம் அவனின் ஊர், அவனின் இல்லம், அவனையடையும் வழி ஆகியவற்றை அறிந்து கொண்டேன்.

உடனே, உள்ளத்து வேகத்தை கொட்டி ஒரு கடிதம் எழுதினேன். அதிஷ்டவசமாக, அவன் ஊருக்கு செல்ல வேண்டியதாயிற்று. நேரிலேயே அவனை அவன் காப்பாளர் ஒருவர் மூலமாக சந்தித்தேன். அங்கங்கள் யாவும் ஒன்று சேர அவனை கையில் அள்ளி எடுத்துக்கொண்டேன். அவன் யார் தெரியுமா? அவன்தான் ''நான்''.

இப்பொழுது ஆர்வத்துடன் அதனை விரும்பி படிக்கின்றேன். என் வாழ்வு வளம்பெறும் என்பதில் ஐயமில்லை. என்னைப்போன்று உங்கள் வாழ்க்கையும் 'நான்'ஞல் வளம் பெறும் என்பது எனது துணிபு. ''சலுசலா'' தாபனத்தில் எழுதுவினைஞராக தொழில் புரிந்துகொண்டு, பத்திரிகைகளுக்கு கவிதைகள் அனுப்புவதில் ஆர்வமுண்டு. ஈற்றில், எனக்கும் 'நான்' க்குமுள்ள உறவு மேலும் இறுக்கமுற நீங்களும் வாழ்த்துங்களேன்.

அன்பின்
M. பாலகிருஷ்ணன்.

# நினைவாற்றல்

## ( MEMORY )

நமக்கு ஏற்படும் அனுபவங்கள் யாவும் நமது உள்ளத்தின் ஒரு பகுதியில் சேர்த்துச் சேமித்து வைக்கப்படுகின்றன. மீண்டும் தேவைப்படும்போது அவற்றை நம்மால் பயன்படுத்திக்கொள்ள முடிகிறது. இதனையே 'நினைவாற்றல்' (memory) என்கிறோம் பழைய எண்ணங்கள், நிகழ்ச்சிகள் அனுபவங்கள் ஆகியவற்றைத் திருத்தமாக நமது உள்ளத்தில் இருத்தி இவை நம்முடன் இன்றும் இருப்பதுபோல் இவற்றினைப் பயன் படுத்துவதே நினைவு (remembering) என்பதாகும் என்று உளவியலறிஞர்கள் விளக்குகின்றனர். கற்றல் பழக்கங்கள் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது நினைவேயாகும். ஏனெனில் அவ்வப்பொழுது கற்பவை யாவும் நமது மனதில் நிலைத்திருக்காமல் உடனே மறைந்து போமாகில் கற்றலினால் நமக்கு ஒரு பயனும் ஏற்படாது நினைவாற்றல் சிறு குழந்தைகளில் காணப்படுகிறது. ஆனால் இது முழு வளர்ச்சி பெற்றுள்ள மனிதனது நினைவாற்றலைக் காட்டிலும் அளவிற் குறைந்ததாகும். நினைவு இருவகைபடும். பொருள்கள், நிகழ்ச்சிகள் போன்றவை பற்றிய நினைவினை 'நோக்கல் நினைவு' ( Observational Memory ) என்றும் சொற்களையும் குறியீடுகளையும் பற்றிய நினைவினை 'நெட்டுரு நினைவு' ( Rote Memory ) என்றும் அழைக்கலாம். இன்றைய பள்ளிகளில் மாணவர்களது நெட்டுரு நினைவைக் காட்டிலும் நோக்கல் நினைவுத் திறனுக்கே அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. நமது வாழ்க்கையில் இவ்விருவகை நினைவுகளுமே அவசியமானவையாம்.

நினைவாற்றல் நான்கு பகுதிகளைக் கொண்டதாக கருதப்படுகிறது. நாம் ஒரு முறையேனும் கற்றவைகளையோ அல்லது அனுபவித்த நிகழ்ச்சிகளையோ தான் நமது நினைவில் நிறுத்திக் கொள்ளவியலும் ஆதலின் கற்றல் அல்லது அனுபவித்தல் நினைவின் தொடக்கப் பகுதியாகும்.

நாம் கற்ற பொருட்கள் நமக்கு மீண்டும் தேவைப் படும் வரை நமது மனதில் இருத்திவைக்கப் படுகின் றன. இதனை மனத்திருத்தல் (Retention) என்கிறோம். மனத்திருத்தலே நினைவாற் றலின் உயிர் நாடியாகும். நம்து மனத்தில் இருத்தி வைக்கப்பட்டுள்ள வற்றை நமக்குத் தேவை எழும் போது நினைவூட்டிக்கொள் கின்றோம். இது மீட்டுக் கொணர்தலாகவோ (Recall 'மீட்டுணர்தலாகவோ' (Recognition) இருக்கலாம். மீட்டுக் கொணர்தல் ஒப்பு வித்தல் எனப்படும், மீட்ட றிதல் அல்லது மீட்டுணர் தல் எனப்படுவதில், நாம் முன்பு கற்ற ஒன்றினை இன்று ஒப்புவிக்கின்றோம் என்பது நிகழ்வதில்லை. நம் மெதிரே தோன்றும் ஒன் றை, இது நமக்குப் புதி தன்று. இதனை நாம் முன் னரே அறிவித்திருக்கிறோம் என்று உணர்வதே மீட்டு ணர்தலாகும். மக்களது நினைவுத் திறனில் சில சமயங்களில் தோன்றக் கூடிய கோளாறுகள் நினை வின் இந் நான்கு பகுதிக ளில் எந்த ஒரு பகுதியை யேனும் பாதிக்கக்கூடும்.

உளவியல் ஆய்வுக்களங் களில் நினைவுபற்றிப் பல சோதனைகள் நடத்தப்பட் டுள்ளன. இத்தகைய பல சோதனைகளை முதன் முத லில் வகுத்து நடத்திக் காட்டியவர் எப்பிங்ஹாஸ் (Abbinghaus) என்னும் உளவியலறிஞராவார் இவரே நினைவுச் சோதனை களில் இன்றும் பயன்படுத் தப்பட்டுவரும் புதிய சோதனை முறைகளையும், வெற்றசைகள் (Nonsense Syllables) போன்ற சோ தனைப் பொருட்களையும் ஆக்கித்தந்தார். நினைவுச் சோதனைகளில் பெரும்பா லும் இத்தகைய வெற்ற சைகளை கற்க வேண்டிய பொருட்களாக அமையும் இவை பொருள் ஏதுமில் லாத அசைகளாதலால் சோதனையில் பங்கு கொள் வோர் எவரும் இவற்றினை முன்னரே அறிந்திருக்க மாட்டார்கள். இதனால் சோதனைகளைக் கட்டுப்பாட் டுடன் நடத்த முடியும். ஆனால் சில சமயங்களில் பொருளுள்ள பகுதிகளும் நினைவுச் சோதனைகளில் பயன்படுத்தப் படுவதுண்டு இச் சோதனைகளினின்றும் பெறப்பட்டுள்ள முடிவுகள் ஆசிரியர்களுக்குப் பெரிதும் பயனுள்ளவையாகும். இம் முடிவுக்ளின் உதவியைக் கொண்டு மாணக்கர்கள் திறம்படக் கற்கவும், கற்ற

னவற்றைப் பல நாட்கள் தங்களது மனதில் இருத்தித் தேவைப்படும்போது பயன்படுத்திக்கொள்ளவும் ஆசிரியரால் பயிற்சியளிக்க முடியும். இனி இச் சோதனைகளில் சில முக்கிய முடிவுகளைக் கவனிப்போம்.

(1) ஒரு செய்யுளையோ அல்லது பாடப்பகுதியையோ கற்று நினைவில் இருத்திக் கொள்வதற்கு அதனைப் பல தடவைகள் திரும்பத் திரும்பப் பயிலுதல் (Repetition) வேண்டும். எவ்வளவு தடவைகள் இவ்வாறு பயில வேண்டும் என்பது ஒருவனது கற்கும் திறனையும் கற்கப்படும் பொருளின் தன்மையையும் பொறுத்ததாகும். இவ்வாறு பல தடவைகள் பயிலும்போது, இப் பயிற்சிகள் யாவற்றையும் தொடர்ந்து ஒரே மூச்சில் மேற்கொள்வது நல்லதா அல்லது இவற்றுக்கு நடு நடுவே இடைவெளிகளை விட்டுப் பயிலுவது நல்லதா என்பது பற்றிப் பல சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் முடிவாக உளவியலறிஞர்கள் இடைவெளி விட்டுப் பயிலலே சிறந்த பயனை அளிக்கவல்லது என்று கண்டுள்ளனர். எடுத்துக்காட்டாக ஒரு மாணவனுக்கு ஒரு பகுதியைத் தனது நினைவில் தங்க வைக்க அதனை இருபது தடவைகள் திரும்பத் திரும்ப பயில வேண்டுமாயின் ஒரே தொடர்ச்சியாக இருபது தடவைகள் அதனைப் படிக்கக்கூடாது. ஒரு நாளைக்கு ஐந்து முறைகள் வீதம் நான்கு நாட்களில் அதனைப் படித்து முடிப்பாராயின் அப்பகுதி அவன் நினைவில் நிலைத்து பதிந்திருக்கும். சில மாணாக்கர்கள் இவ்வுண்மையை அறியாமல் பள்ளித் தேர்வுக்கு முன்தினம் வரை படிக்காமல் தங்களது காலத்தை வீணாக்கிவிட்டு தேர்வுக்கு முன்னிரவு பாடங்களைத் திரும்பத் தொடர்ந்து படிப்பர். ஆனால் அவ்வாறு படித்த பாடப் பொருள் அவர்களது நினைவில் நிலைத்துத் தங்குவதில்லை. ஏன் அடுத்த நாள்வரை கூடத் தங்கி அவர்களது தேர்வில் பயனளிப்பதில்லை. ஆகையால் இத்தகைய தவறான முறையினை மாணவர் ஒதுக்கித் தள்ளுமாறு ஆசிரியர் அவர்களுக்கு அறிவுரை கூறுதல் அவசியமாகும்.

(2) மாணாக்கர் மனப்பாடஞ் செய்ய வேண்டிய பகுதி பல வரிகளைக்

கொண்ட நீண்ட பகுதியாகவோ செய்யுளாகவோ இருக்கக்கூடும். இத்தகைய நீண்ட பகுதியினைப் பல தடவைகள் படிக்கும்போது அதனை முதல் வரியில் தொடங்கிக் கடைசி வரி வரை ஒவ்வொரு தடவையும் படிப்பது சிக்கனமான முறையா அல்லது அதனை சிறு பிரிவுகளாகப் பகுத்து, ஒவ்வொரு பிரிவாக மனப்பாடம் செய்வது நல்லதா என்னும் வினவுக்கு சோதனைகளின் மூலம் விடை காணப்பட்டுள்ளது. இதன் படி, ஒரு நீண்ட தொடர்ச்சியான பகுதியை முழுமையாகப் பயிலுதலே சிறந்த சிக்கனமான மனப்பாடஞ் செய்யும் முறையாகும் எனப்படுகிறது. இவ்வாறு முழுமையாகக் கற்கும்போது கற்கப்படும் பகுதியின் பொருளும் தொடர்பும் தெளிவாக விளங்குவதால் பகுதியை நினைவில் வைத்துக் கொள்வது எளிதாகிறது. சில சமயங்களில் மாணுக்கர் நெட்டுருச் செய்ய வேண்டிய பகுதி அதிக நீளமானதாகவிருக்கக்கூடும். இத்தகைய பகுதிகளை பொருள் தொடர்ச்சியுள்ள சில சிறு பகுதிகளாகப் பிரித்து, பின்னர் ஒவ்வொரு சிறு பகுதியையும் முழுமையாகக் கற்குமாறு மாணுக்கர் தூண்டப்படலாம். இன்று சில உளவியலறிஞர்கள் 'முற்போக்குப் பகுதி முறை' எனப்படும் ஒரு புதுமுறையை வகுத்துள்ளனர். இம்முறையில் ஒரு நீண்ட பகுதி சில சிறு பகுதிகளாகப் பிரிக்கப்படும். முதலில் முதற் சிறுபகுதி நெட்டுரு செய்படும், அடுத்து முதல் இரண்டு சிறுபகுதிகளும் சேர்ந்து மனப்பாடம் செய்யப்படும் பிறகு முதன் மூன்று பகுதிகளும் சேர்ந்து திரும்பத் திரும்பப் பயிலப்படும். இவ்வாறு அந்நீண்ட பகுதி முழுவதும் மனப்பாடஞ் செய்யப்படும். இம்முறை முழுமையாகக் கற்றல் முறை, பகுதிகளாகக் கற்றல் முறை ஆகிய இரு தனிப்பட்ட முறைகளின் நிறைகள் யாவற்றையும் தன்னுள் அடக்கியதாகக் கருதப்படுகிறது. ஆகையால் தொடர்ச்சி நிலைச் செய்யுட்கள் போன்ற நீண்ட பகுதிகளை மனப்பாடஞ் செய்ய முற்படும் மாணுக்கர்களை முற்போக்குப் பகுதி முறையைப் பயன் படுத்துமாறு ஆசிரியர் கூறலாம்.

(3) மனப்பாடம் செய்யப்படும் பகுதியைப் பல தடவை பயிலுதல் இன்றியமை

யாதது. ஆனால் இவ்வாறு பலதடவைகள் திரும்பத் திரும்ப அதனைப் பயிலும் போது அப்பகுதியை எதிரில் வைத்துக்கொண்டு அதனைப் பார்த்தே பயிலுவதிலும் ஓரிரு தடவைகளுக்குப் பின் அதனைப் பாராமலே பயிலுதல் சிறந்த பயனளிக்குமென்று உளவியலாளர் கருத்துத் தெரிவிக்கின்றனர். நமது நினைவு தடைபட்டு நாம் தடுமாறும்போது மட்டும் அப்பகுதியை எடுத்துப் பார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு கற்கையிலே நினைவு படுத்திக் கொள்ளும் முறையானது மாணுக்கர்களுக்கு தந் நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கவல்லது.

(4) சாதாரணமாக ஒரு பாடப் பொருளை மாணவன் ஒருவன் சரியாக மனப்பாடம் செய்ய எத்துணை முறைகள் அதனைப் பயில வேண்டுமோ அத்துடன் நிறுத்திக் கொள்ளாமல் மேலும் சிலமுறைகள் பயிலுவது பெரும் பயனளிக்க வல்லது. இப்படிப் பயிலுவது 'மீக்கற்றல்' (overlearning) எனப்படும். இவ்வாறு கற்றல் மனதில் ஏற்படும் பதிவுகளைத் தெளிவானவையாகவும் வலுவுள்ளவையாகவும் செய்து இவற்றினைப் பின்னர் நன்கு மீட்டுக் கொணர உதவுகிறது.

(5) தமக்கு பொருள் தெரிந்துள்ளவற்றை வெகு எளிதிலும் சிக்கனமாகவும் மாணுக்கர் நெட்டுருச் செய்து விடுவர். ஆனால் பொருள் விளங்காதவற்றினை மனப்பாடஞ்செய்வது கடினமானதும் சிக்கனமற்றதுமான செயலாகவமையும். ஆதலால் ஏதாவது ஒரு பாடத்தை மனப்பாடஞ் செய்ய மாணுக்கரைப் பணிக்கும் ஆசிரியர் அம்மாணுக்கர் அப்பாடத்தினை புரிந்து கொண்டுள்ளனரா என்பதனை நிச்சயப்படுத்தி கொள்வது இன்றியமையாததாகும். மற்றும் மகிழ்ச்சி பரவிய சூழ்நிலையில் கற்கப்படுவன எளிதில் மறக்கப்படுவதில்லை. ஆனால் அச்சம் வெறுப்பு பேன்ற மனவெழுச்சிகளுக்குட்பட்ட நிலையில் மாணுக்கர்கள் எவ்வளவு முயன்று கற்ருலும் கற்றன யாவும் எளிதில் மறந்து போகும்.

(6) இதுவரை கூறப்பட்ட யாவற்றைக் காட்டிலும் கற்றன மனத்தில் நிறுத்தி நிற்க உதவக் கூடிய முக்கிய காரணி மாணுக்கர் கற்கப்படும் பாடப் பொருளின் பால் கவர்ச்சி கொண்டிருத்தலும் அதன் தேவை

யை உணர்தலும் அதனைக் கற்றேயாக வேண்டும் என்னும் மன உறுதியைப் பெற்றுருத்தலும் ஆகும். நடிப்புக்கலையில் ஆர்வமுள்ள ஒரு மாணவன் பல பக்கங்கள் கொண்ட வசனங்களை ஒரே நாளில் நெட்டுரு செய்து விடுகிருன். ஆனல் அதே மாணவனுல் ஒரு சிறு செய்யுளைப் பல தடவைகள் படித்த பின்பும் தவறுகளின்றி ஒப்புவிக்க முடிவதில்லை. இதற்குக் காரணம் அம்மாணவனுக்கு அச்செய்யுளைக் கற்க வேண்டும் என்ற ஆர்வம் இல்லாமையேயாகும், பள்ளியில் கற்கப்படுபவை தனது பிற்கால வாழ்க்கைக்குப் பெரும் பயன்களை அளிக்கக் கூடியவை என்று மாணுக்கர்கள் கருதுவார்களாயின் அவர்கள் பள்ளியில் தாம் பெற்ற அறிவை எளிதில் மறக்க மாட்டார்கள். இத்தகைய கருத்தை மாணுக்கர்களது உள்ளத்தில் அமைக்க வேண்டுமாயின் பள்ளியின் படிப்புக்கும் சமுதாய வாழ்க்கைக்கும் நெருங்கிய தொடர்பினை ஆசிரியர் அமைக்க வேண்டும். இத்தகைய தொடர்பு ஆதாரப் பள்ளியிலே பெருமளவு காணப்படுகிறது.

நன்றி- கல்வி உளவியல்
எஸ்.சந்தானம் எம்.ஏ.,பி.டி.

''என்னிடம் காணப்படும் நல்லனவற்றிற்கெல்லாம் நான் புத்தகங்களுக்குத்தான் கடமைப்பட்டுள்ளேன்.''

— மாக்சிம் கோர்க்கி —

---

குறிப்பு:

''நாளை வளரும் பிள்ளைகளே''
(பக்கங்கள் 27—30)

கட்டுரையை ஆக்கியோன்: A. C. தவரத்தினம், ஆசிரியர்
விசேட ஆங்கில பயிற்சிநெறி, பலாலி.

# சந்துவழி

புதுக் கவிதை

— காவலூரர், எஸ். ஜெகநாதன்.

கழுதை போல்ஒரு
கழுதை நின்றது

காலொரு பக்கமும்
ஆளொரு பக்கமும்
காதொரு பக்கமும்
ஆகிஇ ருந்தொரு

கழுதை போல்ஒரு
கழுதை நின்வது

புத்தகத் தொட்டியின்
பக்கத்தி லேஒரு
கழுதை நின்றது
களைத்து நின்றது

மாவினில் ஆயிரம்
வார்ப்புகள் கூடிடும்
அச்சுஒன் றேஎனில்
எத்தனை கூடிடும்

காலணிக் கேற்பவே
காலைத் தறித்திடும்
கல்விய மைப்பெனும்
யந்திரத்தில். . . .

உற்பத்தி யானவர்
உள்ளமெ லாங்குறும்
பார்வையும் பாதையும்
கொண்டவராய் . . . .

மானுடம் கண்டிடா
மந்த மதியுடன்
மாய்ந்திடு பேதமை
என்ன சொல்ல?

யந்திரப் புத்திரர்
புத்தகப் பூச்சிகள்
வாழ்க்கையும் பார்வையும்
சந்து வழி

அந்த வழியிலே
அது நடந்தது
கழுதை போல்அது
கழுதை நடந்தது

தொட்டியில் அற்புதம்
அற்புதம் ஆகிய
எத்தனை யோவகை
புத்தகம் புத்தகம்

ஆயக லைபல
ஆய்ந்திடு புத்தகம்
வித்துவ மேவிடும்
வித்தகப் புத்தகம்

தொட்டியில் மூஞ்சியை
வைத்தது புத்தகம்
அத்தனை யும்வயி
ற்றேடு நிறைந்தது
கழுதை போல் அது
கழுதை நடந்தது

## மாதிரி சந்தாப் படிவம்

பெயர்:........................................ .............

விலாசம்:..................................................................


..................................................................

ஒருவருட "நான்" சந்தாவாக ரூபா 7/— ஐ காசுக் கட்டளை / தபால் கட்டளை / காசோலை மூலம் இத்தால் அனுப்புகின்றேன்.

திகதி.............................. ... .........................
கையொப்பம்

குறிப்பு: பணம் பெறுபவர் பெயர்: ''நான்'' ஆசிரியர்.
பணம் பெறும் தபாற்கந்தோர்: அம்பிட்டி.

**கேள்வி**



**பதில்**

கேள் : **இந்த 20ம் நூற்றாண்டிலே கல்வி கற்காதவர் குறைவு ஆனால் கல்வி கற்றும் ஒரு சிலர் தமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்ள முடியவில்லையே. அதேவேளை, கற்காத ஒரு சிலர் தமது வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக் கொள்கிறார்கள்.**

ப: ''தன்னைக் காத்துக்கொள்ளத் தெரியாத அறிவாளியைவிடத் தன்னைக் காத்துக்கொள்ளும் முட்டாள் சமுதாய அரங்கத்துள் உயர்ந்தவன்'' என்று சுகி சுப்பிரமணியம் மொழிகின்றார். மேலும் அவர், ''தன் வயிற்றுப் பசியைப் போக்க முயலாத ஆசிரியனிடம் பாடம் படிப்பது கூடத் தீமை. தன்னைக் காப்பாற்ற முடியாதவன் அறிஞனாக இருப்பது சாபத்தீடு'' என்று சாடுசின்றார். படித்த பின்பும் தமது வாழ்க்கையைச் சிறப்பாக அமைக்கத்தெரியாதவர்களைப் 'படித்த முட்டாள்கள்' என்றே கூறவேண்டும். படிக்காத மேதைகளைப் பார்த்தபின்னரும் முன்னேற மறுப்பது இவர்களது மடமைத்தனமே. நியாயமாக நினைத்ததை நிறைவேற்றும் ஆற்றல் இல்லாது போனால் படிப்பால் பயன் ஏதும் இல்லை. மனவலுவாலும் செயற்றிறமையாலும் வளம்பெற்று அறிஞர்களாய் ஆற்றல் மிக்கவர்களாய் கற்றவர்கள் மாறவேண்டும். ஒவ்வொருவரும் தன்னிடமுள்ள தனிப்பட்ட திறமைகளை ஒழுங்குபடுத்தி, தன்னகச் சக்திகளை ஒருங்குபடுத்தித் திட்டமிட்டுச் செயற்படுவதன்மூலம் சிறப்பாக வாழ்க்கையை அமைத்துக் கொள்ளலாம்.

# அறிவை வளர்க்க 6 வழிகள்

— வி. பற்றிக், பேராதனைப் பல்கலைக் கழகம் —

''நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலமிக்க
நல்லார் சொற்கேட் பதுவும் நன்றே - நல்லார்
குணங்களுரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று,''

— ஔவையார்.

“கெட்ட கனி தரும் நல்ல மரமில்லை, நல்லகனி தரும் கெட்ட மரமில்லை. ஒவ்வொரு மரத்தை யும் அறிவது அதனதன் கனியாலே. ஏனெனில், முட்செடியில் அத்திப்பழம் பறிப்பாருமில்லை; நெருஞ்சியில் திராட்சைக்குலை கொய்வாருமில்லை. நல்லவன் தன் உள்ளமாகிய நற்கருவூலத்தினின்று நல்லவற்றை எடுத்துக் கொடுக்கிறான். தீயவனோ தீயதினின்று தீயவற்றை எடுத்துக் கொடுக்கிறான். ஏனெனில், உள்ளத்தின் நிறைவினின்றே வாய் பேசும்''

— இயேசுநாதர்.

நாம் நல்லவர்கள் என்பதை நமது செயற்பாடுகளிலிருந்தே அறிந்து கொள்ளலாம். நம்மையும் மற்றவர்களையும் நல்லவர்களாய் வாழவைப்பதாய், கல்வி அமைதல் அவசியம். ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது'' ஆகினும், ஏட்டுக்கல்வி வாழ்க்கைக்கு உதவியே ஆகவேண்டும் - இல்லையேல் கல்வி பயில்வதில் கருத்து எதுவுமேயில்லை - வெறும் தொழிலீட்டலயே நோக்காகக் கொண்டு கல்விபயிலுதல் ஆபத்தா

னது. எனவே, வாழ்வை வளம்படுத்துவதாய் அமைந்த அறிவை வளர்க்கும் வழிகளை ஆராய்வோம்.

## ● பெற்ரோரின் தாக்கம்

அறிவூட்டலில் பெரும் பகுதியானது தாயின் கருப் பையில் சிசு இருக்கும் பொழுதே நிகழ்வுறுகின்றது என்கிருர்கள் உளவியலாளர்கள். தாயின் உள்நோக்கு, மனநிலை போன்றவை குழந்தையின் உள்ளத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. ஒரு தாய் அறிவூட்டலில் தவறிவிட்டதைத் தாங்கமாட்டாமல் வயதுவந்தபின்னர் அவளது மகன், "துள்ளித் திரியும் என் பருவத்தில் துடுக்கை அடக்கி பள்ளிக்கு அனுப்பிவையாத பாதகியே'' என்று ஏசுகின்ருன். தந்தையின் பேச்சு எவ்விதம் ஒருவனை ஆக்குகின்றது என்பதை விளக்க ஔவையார், கொன்றை வேந்தனில், "தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'' என்கின்ருர்.

## ● அனுபவம் தருவது:

அனுபவ வாயிலாகப் பெற்ற அறிவு இலகுவில் அழியாதது. அன்ருடம் நிகழும் சம்பவங்களை விமர்சிக்கையில் அவை ஏதாவதொரு வகையிலாவது அறிவூட்டுபவையாகவே அமைகின்றன. அதேவேளையில், ஒவ்வொருவனும் தன் தன் சொந்த அனுபவத்திலிருந்து மட்டும்தான் அறிவைப் பெறமுடியும் என்பதற்கில்லை. மற்றவர்களது அனுபவத்திலிருந்தும் அறிவைப் பெறலாம். அனுபவம் சார் அறிவு, உணர்த்திறன் மிகுந்தது. உயிரூட்டம் பெற்ற வாழ்விற்கு அனுபவம் சார் அறிவே அவசியமானது.

## ● வாசித்தல்:

"கண்டதையும் கற்கப் பண்டிதன் ஆவான்'' என்ருற்போல் எதனையும் வாசிக்கப் பின்வாங்கக்கூடாது. எத்தனையோ வகையான கதைகள், கட்டுரைகள், கவிதைகள் என்றெல்லாம் வெளிவருகின்றன. எல்லாவற்றையும் வாசிக்கமுடியாது. எனினும் வாசிப்பவற்றை விமர்சனக் கண்ணேட்டத்தோடு பார்க்கவேண்டும். கருத்தாழம் மிக்க வசனங்களை மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டும். வாசிக்கும்பொழுதே (முடிந்தால்) சிறு குறிப்புகள் எடுத்தல் நன்று. பணம் விரயமாகின்றது என்று எண்ணி புத்தகங்களை வாங்கிப் படிக்கப் பின்வாங்க வேண்டாம். மாதாமாதம், ஒரு குறிப்பிட்ட அளவு

தொகையைப் புத்தகங்களில் செலவிட்டு ஒரு வீட்டு நூலகத்தை ஆரம்பிப்பது அறிவை வளர்ப்பதற்குச் சிறந்த ஒரு வழி.

● **கேட்டல்:**

''பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்,'' ''சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.'' என்று அதிவீரராமபாண்டியன் வெற்றி வேற்கையில் கூறினாற் போன்று ஒருவரது உருவத்தைக்கொண்டு அவர் அறிவிற் பெரியவர் என்றோ அன்றேல் சிறியவரென்றோ கூறமுடியாது. உருவினிற் சிறியவராயிருந்தாலும் அவர் அறிவினிற் பெரியவராயிருக்கலாம். எனவே, அறிவை வளர்ப்பதற்கு அறிவினிற் பெரிய எவரது பேச்சுக்கும் செவி மடுப்பது அவசியம்.

● மீட்டல்:

புலியானது பாய்வதற்கு முன்னர் பதுங்கும். மனிதனும் முறையாக வாழ்வதற்கு பின் நோக்கிப் பார்த்தல் அவசியமாகின்றது. தன் சொந்த அனுபவத்திலிருந்து அல்லது மற்றவர்களது அனுபவத்திலிருந்து பெற்ற அறிவினையும், புத்தகங்களிலிருந்து வாசித்து, பிறரிடமிருந்து கேட்டு அறிந்ததையும் மீட்டல் செய்வது அறிவூட்டலில் முக்கிய படியாகும். கிரகிக்கும் சக்தியைக் கூட்டுவதற்கு மீட்டற் பயிற்சியே தேவை. வளமாக வாழ்வதற்கும் பெற்ற அறிவினை திறமையாகப் பயன்படுத்துவதற்கும் மீட்டல் உதவி செய்கின்றது. மீட்டலுக்கு போதியளவு நேரத்தைச் செலவிட்டு பரீட்சை செய்து திறமையாகச் சித்தியடைந்த மாணவர்கள் இதற்கு சான்று பகருவார்கள்.

● **இறையுணர்வில் மிதத்தல்:**

''கற்றதனாலாய பயன்
என்கொள் — வாலறிவன்
நற்றாள் தொழாஅர்
எனின்''.

— என்கின்றார் திருவள்ளுவர்.

கற்றதின் பயன் கடவுளை வணங்குதல்; வணங்காவிடின் கற்றதில் பயன் இல்லை. இதமான வாழ்விற்கு இன்றியமையததது இறையுணர்வு. இறையுணர்வு இரண்டறக் கலக்காத கல்வி ஒருவனிடத்தில் வெறுமையையே உருவாக்கும். இறைபற்றுள்ள அறிவூட்டலைப் பெற்றவர்களே உயர்வான, உத்தமமான வாழ்க்கையை அமைப்பார்

கள்.

ஈற்றில்' ஒருவன் தனது மனத்தை, சிந்தனையை, சக்தியை ஒருமுகப்படுத்தி ஒழுங்கான ரீதியில் செயற்படும் பொழுதே அறிவூட்டல் நிறைவு பெறுகின்றது: அவன் வாழ்க்கையும் அறிவாற்றலோடு ஒருங்கிசைகின்றது.

## கல்வி வாழ்க்கைக்கே !

எக் கல்வியாயுனும் அது, நம்து அறிவைக் சீராக்கி, செம்மைப்படுத்தி நமது வாழ்வில் பயன்படுவதாய் அமைதல் அசிவயம். அப்பொழுதுதான் கல்வியின் உண்மைக் குறிக்கோள் நிறைவுபெறுகின்றது. வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ வழியைப் புகட்டும் கலையே கல்வியாகும்.

''கான மயில் ஆடக் கண்டிருந்த வான்கோழி தானும்
அதுவாகப் பாவித்துத் - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினுல் போலுமே
கல்லாதவன் கற்ற கல்வி''

என்கின்ருர் அவ்வையார். அதாவது தகுந்த கல்வி அறிவில்லாதவன் கற்றவனைப் போல் பாசாங்கு செய்வது, தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து வான்கோழி சிறகை விரித்து ஆடுவது போன்ருகும். தகுந்த கல்வியறிவோடு உகந்த வாழ்க்கையை வாழ்வது கல்வியின் சிறப்பே. நிறைவான வாழ்விற்கு நிலையான செல்வம் கல்வியே. கல்வி நம் வாழ்க்கைக்கேயன்றி வாழ்க்கை கல்விக்கன்று. கல்வி வாழ்க்கைக்கே !

— ஒஸ்டின் லோவ்.



# நாளை வளரும் பிள்ளைகளே!

இறைவன் ஆதியில் மனிதனை உருவாக்கும் பொழுதே அவனை ஆறறிவு அல்லது பகுத்தறிவு படைத்தவனாகவும் விலங்கினங்களை ஐந்தறிவு படைத்தனவாகவும் உருவாக்கினார். பகுத்தறியும் தன்மை என்னும் மாபெரும் கொடை ஒன்றினால் மட்டும் அவன் உலகை ஆளுகின்றான். தனது சிறப்பு மிகுந்த **கொடையில்** அதாவது அறிவுச் செல்வத்தினால் உலக அரங்கில் முதன்மை பெற்றவனாகத் திகழுகின்றான். அதேவேளை மிருகங்களில் இருக்கும் சகல குணங்களையும், செயல்களையும் மனிதன் கொண்டிருக்கின்றான். இதனால் தான் அவனை 'சிந்திக்கும் விலங்கு' ( rational animal) என்று அரிஸ்ரோட்டல் அழைக்கிறார். ஆனால் தனது அறி

வாற்றல் என்னும் அபார சக்தியினால் அடக்கி ஆளு கின்றான்.

இறைவன் கொடுத்த இந்த அறிவாற்றலை அவன் எங்ஙனம் விருத்தி செய்ய முடியும்? இதற்குத்தான் கல்விச் செல்வம் துணைபுரி கின்றது. கல்வியறிவு அற்றவர்களை இன்றைய சமுதாயம் விலக்கி வைக்கின்றது. கல்வி அறிவு அற்றவர்களை பண்பாடற்றவர்கள், பட்டிக்காட்டார் என்று கூறி அவர்களுக்குத் தனி இடம் அளிக்கின்றது. இந்தக் கல்வி அறிவு ஒன்றினால் மட்டும் மனித சமுதாயம் சீர் திருந்தி இன்று முன்னேற்றப்பாதையில் வீறு நடை போடுகின்றது. மிதன்மஇன்றைய உலகில் ஏற்படுத்தி இருக்கும் பலவிதமான முன்னேற்றங்களும் கல்வியின் திறமை அடிப்படையில் ஏற்பட்டவையேயாகும்.

இக்கல்வியை நாம் எப்பொழுது பெற்றுக்கொள்ள வேண்டும்? ''இளமையிற் கல்வி சிலையில் எழுத்து'' என்பார்கள்; அது போல இளமையிலிருந்தே கல்வியை ஆரம்பிக்க வேண்டும். இளைஞர்களுக்குக் கல்வி முக்கியமான தொன்றாகும். இதன் காரணமாகத்தான் பாடசாலைகள், கல்லூரிகள், தனியார் கல்வி போதனா நிலையங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. அவைகள் மூலம் கல்வி போதிக்கப் படுகின்றது. இன்றைய இளைஞர்களே நாளைய சமுதாயத்தின் வச்சிரத்தூண்கள். வருங்காலத்தில் கட்டியெழுப்பப்படும் சமுதாயத்திற்கு இவர்கள் தூண்களாக அமைகின்றார்கள். ஆகவே சிறந்ததொரு சமுதாயத்தைச் சமைக்கும் பொருப்பை ஆசிரியர்களும், பெற்றோர்களும் பெறுகின்றார்கள். ஆசிரியனும்' பெற்றோரும் தான் ஒரு மாணவனின் எதிர் காலத்தை நிர்ணயிக்க முடியும். அவனுக்குத் தேவையான கல்விச் செல்வத்தை வாரி வழங்க முடியும். இதனால் தான், ''நாடு என்னும் தோட்டத்திலே நாளை மலரும் பிள்ளைகளே'' என்று கவிஞர் பாடுகின்றார்.

ஆனால் இன்றைய இளைஞர்கள் கல்விச் செல்வத்தின் மீது கொண்டுள்ள ஆர்வம் கணிசமான அளவு குறைந்துள்ளது. காரணம்? நமது நாட்டின் நிலைமையை இன்று ஒரு கண்ணோட்டத்தில் பார்த்தால் ஒவ்வொரு

மாணவனும் ஒரு குறிக்கோளைக் கொண்டுதான் கல்வி கற்கின்றான். ஆனால் குறிக்கோளை அடைய முடியாத போது அவனது வாழ்வில் விரக்தி ஏற்படுகின்றது. தான் படித்து, பட்டம் பெற்று, சமுதாயத்திற்கு சேவையாற்றி மன மகிழ்வோடு வாழ வேண்டும் என்று எண்ணுகின்றான். ஆனால் 'வேலை இல்லாத் திண்டாட்டம்' என்னும் பிரச்சினை அவனது எண்ணங்களைத் தவிடு பொடியாக்குகின்றது. படித்து விட்டும் நாம் வீட்டில் தான் இருக்க வேண்டும் அல்லது ஊர் சுற்ற வேண்டும் என்னும் எண்ணம் அவனை மேற் கொண்டு படிக்க விடாது தடுக்கின்றது. அது மட்டுமல்ல ஏற்கனவே படித்து விட்டு வீட்டிலிருக்கும் சகோதர, சகோதரிகள் எடுத்துக் காட்டாக இருக்கின்றார்கள். குடும்பப் பிரச்சனைகளும் கூட ஒரு மாணவனையோ அல்லது மாணவியையோ மேற் கொண்டு படிக்க விடாது தடை செய்கின்றது. இப்படியாக நாம் பல காரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

கல்வி என்பது ஒரு முதலீடு. இதை ஒரு சிறப்பான முதலீடாகக் கொள்ளலாம். தன்னைத் திருத்துகின்றது, தனக்கென ஒரு அந்தஸ்தைப் பெற்றுத் தருகிறது. இத்தோடு தான் பெற்ற அறிவைக் கொண்டு அவனது வாழ்க்கைக்கு ஊதியத்தைப் பெற உதவுகின்றது. அத்தோடு கல்வி தொழில்களை ஆக்கவும் உதவுகின்றது.

பணத்தைப் பெற அல்லது வாழ்க்கைக்கு ஒரு பணம் தரும் தொழிலைத் தர மட்டும் இக்கல்வி உதவ வேண்டும் என இளைஞர்கள் எண்ணுகின்றார்கள். ஆனால் இக்காலத்தில் தொழிற் சமத்துவம் என்ற நிலையில் மனித அறிவுக்கு அதிகம் சிரமம் கொடாத உழைப்புகளும் அதிக வருவாயைத் தரக்கூடியதாக இருப்பதால் கல்வியின் முக்கியத்துவம் வெகுவாய்ப் பாதிக்கப்படுகின்றது. இச்சூழ்நிலையில் ஒரு வைத்தியனுவதற்குத் தேவைப்படும் கூர்ந்த அறிவின் பெறுமதியைப் பற்றி இளைஞர்கள் சிந்திக்க வேண்டும். வைத்திய, பொறியியற் சேவைகளை அறிவாற்றலின் அதி உயர்ந்த நுண்மையினுற் தான் பெற முடியும். இவ்விடத்துப் பணம் அல்லது அத்தொழிலின் தேவை, அதன் சேவை என்பன

கணிக்கப்படுகின்றன,

ஈற்றில், கல்வியறிவு மனிதனை இறைவன் பால் இட்டுச்செல்லுகின்றது. கல்வி அறிவு இறை பக்தியோடு தொடர்புடையது கல்வியறிவு இறைவன்பால் இட்டுச் செல்ல வேண்டும். அன்றேல் அது பிரயோசனமற்றது 'தொட்டனைத்தூறும் மணற் கேணி மாந்தர்க்கு கற்றனைந் தூறும் அறிவு'' என்பது மூதுரை. எனவே கல்வி அறிவு என்பது, எவ்வளவு ஆழத்திற்கு ஒரு கிணற்றை அல்லது கேணியைத் தோண்டுகிறோமோ அந்த அளவிற்கு நீர் நிலை உயரும். அதேபோல எந்த அளவிற்குக் கல்வியின் அறிவைப் பெறுகின்றோமோ, அந்த அளவிற்கு அறிவுடையோராகவும், ஒரு புதிய சமுதாயத்தைச் சமைக்கும் ஆற்றல் உள்ளவர்களாகவும் விளங்குவோம் என்பதில் ஐயமில்லை.


எமது அடுத்த வெளியீடு



சந்தேகம்
(SUSPICION)

என்ற கருவினைக்கொண்டு மலரவிருக்கின்றது

- தனி மனிதனில்
- குடும்பத்தில்
- சமுதாயத்தில்

சந்தேகம் ஏற்படுத்தும் விபரீத விளைவுகளை
கட்டுரை, கதை அல்லது கவிதை வடிவங்களில்
உடனே எழுதி அனுப்பிவையுங்கள்



# கருத்துக் குவியல் 16

## கல்வியின் நோக்கு பொருளீட்டலா? பொதுப்பணியா?

## பொதுப்பணிக்கே:

○ அழகே அழகு:

''கற்கை நன்றே, கற்கை நன்றே பிச்சை புகுனும் கற்கை நன்றே'' என்று மூத்த மூதாட்டி சிகரம் வைத்த சிறப்பு செல்வமான கல்வியைப் பற்றி பலரும் பலவிதமாகக் கூறுகின்றனர். கல்வி என்பது ஞானமும் அறிவும இரண்டற சங்கமிக்கும் இடமாகும். இது மனிதனை உருவாக்கிறது. மேலும் கல்வித்துறை முழுமையானதாக இருக்க வேண்டு மெனில் மூன்று அம்சங்கள் அதில் இருக்கவேண்டும்.

1. யோகம் - மன அமைதி
2. உத்தியோகம் - லெளகீக வாழ்வுக்குகந்த தொடர்பு
3. சகயோகம் - பரஸ்பர சுரண்டலற்ற கூட்டுறவு.

இவற்றையெல்லாம் பொதுப்பணி தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலும் பொறியியலாளர், கணக்கியலாளர் என பல் வேறு மேதைகளை உருவாக்கும் சட்டாபிகள் இன்றுவரை அதிக சம்பளமற்று, வளமான வசதிகளற்றுப் பணியாற்ற வேண்டியிருப்பதும் பொதுப்பணியை மையமாகக் கொண் டாகும். ''குஞ்சு அழகும் கொடுத்தானைக் கோட்டழகும் மஞ் சள் அழகும் அழகல்ல நெஞ்சத்து நல்லம் யாமெனும் நடுவு நிலைமையாற் கல்வி அழகே அழகு''. இப்பாடல் முடியழகு, உடையழகு, உடல் அழகிற்கும் மேலாக நம் மனச்சாட்

சிக்கு நாம் நல்லவர் என்ற பொதுநிலமை நோக்கத்தைக் கொண்ட கல்வியழகிற்கே முதல் இடத்தைக் கொடுக்கின்றது. எனவே கல்விக்கழகளிக்க பொருளீட்டுவதை முழு நோக்காகக் கொள்வது தவிர்க்கப்படவேண்டும் என நான் கருதுகிறேன்.

— யா. சிலுவை ரெட்டினம்
புனித வளனூர் குருமடம்,
கொழும்புத்துறை.

○ **வாடாமலர்:**

''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு மாடல்ல மற்றையவை'' என்ற திருவள்ளுவர்வாக்கு எதைச்சொல்கின்றது தெரியுமா? ஒருவனுக்கு அறிவே இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும். கல்விதவிர மற்றப் பொருள்கள் யாவும் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல. ஆனல் இக்கல்வியை இன்று எம்மிடையே பொதுப் பணிக்காகச் செலவிடுபவர் மிகச் சிலரே. வஞ்சகம், சூது, பொறுமை இவையெல்லாம் ஒருங்கே இணைந்த கறல்படிந்த சமுதாயம் தான்பெற்ற கல்வியை வழங்குவது பொருளீட்டவே. ஆனல், கல்வி பொதுப்பணிக்காக அர்ப்பணிக்கப்படவேண்டிய வாடா மலர். கற்பிழந்த கன்னியின் நிலையும் கல்வியில் கரை காணுதவர் அதைக் கறல் படுத்தும் நிலையும் ஒன்றே. கல்வியில் கரை காணுதவர் நிலையே இப்படி. ஆனல் முற்றும் கற்றறிந்த மேதைகளுக்கு கல்விச் செல்வம் ஏராளம், தாராளம் எனவே பணத்தை ஒழித்துவைத்துவிட்டு திறப்புக்கோர்வைக்குக் காவல் இருக்கும் முதலாளி வர்க்கம்போல் இவர்கள் தங்கள் கல்விச் செல்வத்தை ஒழித்து வைப்பதுமில்லை. அதற்குக் காவல் இருப்பதுமில்லை. அள்ளி அள்ளி இறைப்பார்கள் அதுவும் அமுத சுரப்பிபோல் சுரந்து கொண்டேதான் இருக்கும். வான் என்னும் வீதிக்கு முடிவே இல்லையல்லவா, அதுபோல்தான் மாமேதைகளின் கல்விக்கும் முடிவு எங்கே என்பது தெரியாமல் தொடர்ந்து கொண்டே இருக்கும். அதுதான் அவர்கள் உலகம். அதிலேதான் அவர்கள் இன்பமும் குவிந்திருக்கின்றது. இதைத்தான் திருவள்ளுவரும்,

''தாமின் புறுவது உலகின்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்'' என்று மொழிந்தார்.

தான் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு கற்றறிந்த அறிஞர் மென்மேலும் அக்கல்வியையே விரும்புவர் என்கிறார். எனவே கல்வியென்பது பொதுப்பணி எனும் புனிதத்துவத்திற்கு அர்ப்பணமாகும் அழகுமலர் அதில் நார் கல்வி. பிணைக்கப்படும் பூக்களே கல்வி என்னும் புனித சுகத்தைப் பெற்று மணம் பரப்பும் மனித சமுதாயம்.

செல்வி. சகாயராணி சோமநாதன்
தாழங்குடா - 3
காத்தான் குடி.

### ○ பொருளீட்டலும் பொதுப்பணிக்கே:

கல்வியின் நோக்குப் பொருளீட்டலாயிருந்தாலும் அப்பொருள் பொதுப்பணிக்கே உபயோகப்படுத்தப்பட வேண்டும். மானிட சமூக அமைப்பானது, ஓர் உயிர் மற்றோர் உயிருக்குத் துணை புரிந்து வாழ்வதையே அடிப்படையாகக் கொண்டது. எனவே பொருளைத் தனக்கென்று தேடாது தன்னிடத்திருப்பதை பிறர்க்குப் பண்புடன் கொடுப்பதே மேலானது. வகையறிந்து அன்புடன் கொடுப்பதால் கொடுப்பவனுக்கும் ஏற்பவனுக்கும் குறை ஒன்றும் வருவதில்லை. இறைக்க இறைக்கக் கேணீர் ஊறுவதுபோன்று, எடுத்து முறையாக வழங்க வழங்க ஆற்றலும் ஆக்கமும் உயிரின் கண் உயர்கிறது. இது வாழ்க்கையின் மேலாம் கோட்பாடாகும். கல்வியை மற்றவர்களுக்குப் புகட்டுகிற அளவு ஒருவன் தானே கல்விமானுகின்முன். செல்வத்தையும் அப்படியே பொதுநன்மையின் பொருட்டு முறையாகத் தேடிப் பயன் படுத்துகிற அளவுக்கு அது மேலும் வளர்கிறது. பொது நன்மையிற்தான் தனி நன்மை அடங்கி இருக்கின்றது.

செ. ராஜேஸ்வரி,
பேராதனை வளாகம்

## பொருளீட்டலுக்கே:

### ○ மாறிவிட்டது மனித இனம்!

''கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக'' என்ற திருக்குறளை மாற்றி ''கற்க கடன்பட்டுப் பட்டம் பெறும் வரை, பின் நீக்குக வறுமையினை நல்ல தொழில்

செய்து'' என்று கூறக் கூடிய அளவிற்கு எமது நாட்டு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்களென்றால் அதன் காரணம் வாழ்க்கைச் செலவு உயர்வும், விஞ்ஞானத்தின் வளர்ச்சியுமே. வாழ்க்கைச் செலவு கூடிக்கொண்டுபோகும் இவ்வேளையிலும், மேற்கூறியதுபோல கடன்பட்டென்றாலும் கல்வி கற்றுவிடவேண்டும், அதுவும் விஞ்ஞானக் கல்வி கற்றுவிட வேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் மாணவர்களின் தொகையும் அதிகரித்துக்கொண்டு செல்வதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மக்களின் அன்றாட வாழ்வுடன் விஞ்ஞானமானது இரண்டறக்கலந்திருக்கும் இவ்வேளையிலே அவர்கள் விஞ்ஞான அறிவைப் பெற்றிருக்கவேண்டியது மிகவும் அவசியமானதே. இன்னும் வேலைத்தளங்களிலும், வீடுகளிலும், மின்சாரப் பொறிகள், மின்சார சாதனங்கள் போன்றவை பயன்படுத்தப்பட்டு வருவதனால் தொழில் வாய்ப்புக்களும் விஞ்ஞானக் கல்வியறிவைப் பெற்றுக் கொண்டவர்களுக்கே கிடைக்கக்கூடியதாகவுள்ளது. எனவே தான் பெரும்பாலான மாணக்கர்கள் தமது எதிர்கால தொழில் வாய்ப்பினைக் கருத்திற்கொண்டு விஞ்ஞானக் கல்வியை மேற்கொள்ள விழைகிறார்கள்.

கடந்த காலங்களிலே இலை ஆடுவதும் ஈசன் செயல் என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்த மக்களின் கல்வி முறையானது கடவுளையே மையப் பொருளாகக் கொண்டிருந்தது. அன்றைய மக்கள் கற்பதன் மூலம் மேலும் மேலும் கடவுளைப்பற்றி உணர்ந்து கொண்டதனால் அவர்களிடத்திலே அயலவருக்கு உதவி செய்ய வேண்டும், பொது நலனுக்காக உழைக்க வேண்டும் என்ற அரும் பெரும் குணங்கள் காணப்பட்டன. ஆனால் இன்றைய மனிதனோ விஞ்ஞானத்தின் உதவியின் மூலம் யாவற்றையும் அறிந்து கொள்ள முயலுகின்றான். இன்னும் அவனிடத்திலே பொதுநலனில் தான் ஈடுபட வேண்டும் என்ற நல்ல பண்பு குறைந்தே காணப்படுகின்றது. தன்னுடைய வாழ்க்கைச் செலவைச் சமாளிப்பதற்காகத்தான் இயந்திரம் போலத் தொழிற்பட்டு, மாடாக உழைக்க வேண்டியிருக்கும் இவ்வேளையிலே அவன் எப்படிப் பொது நலனிற்காக உழைக்க முடியும்? எனவே இன்றைய காலகட்டத்திலே ஒரு மனிதன் பொது நலனுக்

காகவே தனது கல்வியை மேற்கொள்கின்றுன் என்று கூறுவோமாகில் அது ஒரு பெரும் பொய்யாகும்.

செல்வி. ஹூ. செரீன்
கிருலப்பனே.

## ○ பொருளாதார சுபீட்சம்

வாழ்க்கையில் குறிக்கோள் அல்லது இலட்சியமின்றி வாழும் மனிதனைக் காண்பது அபூர்வம். ஒவ்வொரு மனிதனும் ஏதாவதொரு இலக்கை மனதிற் கொண்டே தனது இலட்சியப் பாதையில் பயணம் செய்கின்றுன். அதே போன்றுதான் மனிதனும் கல்வியை, பொருளீட்டலை மனதிற்கொண்டே கற்கின்றுன். அவன் பாலிய பருவத்திலிருந்தே, பலவிதமான உயரிய ஆசைகளை, ஒளிமயமான எதிர்காலத்தை நினைவிற்கொண்டே கல்வியில் கவனம் செலுத்துகின்றுன். சில பெற்றேர்கள் தம் ஆண்மக்களின் கல்வியில் அதிகம் அக்கறை கொள்வது, அவர்கள் எதிர்காலத்தில் கொழுத்த சீதனத்தோடு இன்பகரமான வாழ்க்கையை அமைக்க வேண்டும் என்று கருதுவதேயாகும். ஒருவன் எவ்வளவிற் கெவ்வளவு அதிகம் கல்வி பயிலுகின்றுனே அவ்வளவிற்கவ்வளவு உயர்ந்த பதவியை வகித்து பெரும் செல்வம் குவித்து சமூகத்தில் கௌரவத்தோடு வாழ்க்கை நடத்துவான். எனவே ஒரு மனிதன் மகிழ்ச்சிகரமான வாழ்வை அடைய வேண்டுமென்று விரும்புவதில் தவறில்லை. அவன் பயிலும் கல்வி அறிவை வளர்ப்பதோடு நின்றுவிடாது அவனை பொருளாதார சுதந்திரத்தோடு ஓரளவு நிறைவான வாழ்க்கையை அமைக்க வழி வகுக்கின்றது. ஆகையால் கல்வி பொருளீட்டலுக்கு வழிவகுத்து, மகிழ்ச்சிகரமான வாழ்வை அநுபவிக்க மனிதனுக்குத் துணை நிற்கின்றது.

ரேகன்,
யாழ்ப்பாணம்.

---

**சிந்திக்காமல் படிப்பது வீண்,**
**படிக்காமல் சிந்திப்பது ஆபத்தானது.**

உள்ளத்தில் உள்ளது

# உயர்வு

— லலிதா, மட்டக்குளியா —

"உன்னையே நீ முதலில் நேர்மையுள்ளவனுக்கு. உலகில் ஒரு துட்டன் குறைந்து விட்டான் என்பது நிச்சயம்." உனக்கு நீயே உண்மையுள்ளவனாக இருந்தால் பிறருடன் உண்மையுள்ளவனாய் இருப்பாய். இமைக் குற்றம் கண்ணுக்குத் தெரியாதல்லவா! உலகைக் குறை கூறுவது மிகச்சுலபம் எம்மைக் குறைகூற, அலசிப் பார்க்க, எம்மைத் திருத்த முயற்சிப்பது கடினம். மனிதன் தன்னைத்தானே அபிலாசைகளுக்கு அடிமையாக்கி வைத்திருக்கிறானே! அதிகார ஆசைக்கு அடிமை, புகழுக்கு அடிமை, பணத்துக்கு அடிமை, பதவிக்கு அடிமை, சிற்றின்பத்திற்கு அடிமை. அவன் எவற்றை தனக்கு அடிமையாக்க வேண்டுமோ அவற்றிற்கே அவன் அடிமையாகிக் கொண்டு வருகிறான். அவன் முதலில் தன்னையே விடுதலையாக்க வேண்டும். தன்னை வென்ற பொழுதே தரணி முற்றும் வென்றதாகும். தான் யார் என்றும், எங்கிருந்து வந்ததென்றும் எங்கு போவதென்றும் கண்டுணர்ந்தவனுக்கு இவ்வுலக இன்பங்களும் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் ஒரு பொருட்டாகாது.

''நீ உன்னை அறிந்தால், நீ உன்னை அறிந்தால் உலகத்தில் போராடலாம் உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலைவணங்காமல் நீ வாழலாம்'' என்று பாடுகிறார் கவிஞர் ஒருவர்.

கருவிலிருந்து பிறப்பவன் மறு உலகத்தைக் காண்கின்றான். தன்னிலிருந்து பிறப்பவன் இவ் உலகத்தைக் காண்கின்றான். தன்னுணர்வும் தன்னறிவும் தன்னிறைவும் பெற்ற மகான்கள் உலகக் கண்ணில் மகத்தான ஒரு சாதனையையும் சாதிக்கவில்லை. அவர்கள் வாழ்ந்த வாழ்வும், படிப்பித்த படிப்பினைகளுமே கோடிக்கணக்கானோரை அவர்கள் முன்

தாழிடச் செய்கின்றன. சிற்பியின் கையில் அகப்பட்ட மரக்குத்திக்கு மனிதன் ஒப்பாகுகிறுன். மிகையாய் உள்ளதை வெட்டி விலக்கி கோணலாய் உள்ளதை நோக்கி இருள் கவிந்திருப்பதை ஒளி வீசச் செய்து அழகு நிறைந்து நிறைவு பெற்ற ஒரு சிலையைச் சமைப்பது சிற்பியும் சிலையுமாகிய மனிதனின் கடமை. இவ்வுலகில் இன்பத்தையடைய விருப்பமிருக்கலாம். ஆனுல் தன்னை மூழ்கடிக்கும்வரை இன்பத்திற்கு இடமேயில்லை. வாழ்விற் குடிகொண்டுள்ள பொருத்தமற்ற அத்தனையும் சிறிது சிறிதாக மாண்டு மடியவேண்டும். சில அற்ப ஆசைகளையும் வைத்திருக்கக் கூடாது. மனிதன் மறுபடியும் பிறவாதிருந்தால் நித்திய வாழ்வை அடைய மாட்டான். ''தன் உயிரை இழப்பவன் அதைக் கண்டடைவான்'' என்று யேசு கூறும்போதுஒருவன் தன்தீய சார்புகள் அத்தனையையும் மூழ்கடிக்க வேண்டுமென்றே கூறுகிறுர். சலவைக்காரன் கையிற் சிக்கிய அழுக்குத் துணிக்குச் சில விநாடிகள் விடுதலை கிடையாது. அழுக்கு முழுவதும் துணியிலிருந்து அகலும்வரை அடி வாங்கிக் கொண்டேயிருக்கும். அவ்வாறே நம் உள்ளம் சுத்தமாக நல்லொழுக்க விதிகளும், பயிற்சியும், தவமும், ஒறுத்தலும், பரித்தியாகங்களும் இன்றியமையாதன. எவ்வித கட்டாயமுமற்ற காட்டு விலங்குச் சுதந்திரம் மனிதனை அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும். மல் யுத்தத்தில் வெற்றியடைய எத்தனை நாட்கள் இடிபடவேண்டும் உதைபடவேண்டும். மனிதன் தன் உளவாழ்வில் மட்டும் எவ்வித கட்டாயமுமின்றி, கஷ்டமுமின்றி நிறைவு பெற்றுவிட ஆசிக்கிறுன். புனிதர்கள், மகான்கள், தலைவர்கள் என்பவர்கள் தவறு செய்யாதவர்கள் அல்லர். ஆனுல் புதிதாக வாழ்க்கையை ஆரம்பித்தவர்கள்.

சிறு தும்புகளைக்கொண்டே பெரிய கயிறுகள் திரிக்கப்படுகின்றன, சிறுதுளிகள்தான் பெரு வெள்ளமாகிறது, முளையில் கிள்ளியெறிய வேண்டியதைத் தான் பின் கோடாரி கொண்டு வெட்ட நேரிடுகிறது. இவ்வாறே தீய பழக்கங்களின் கொடுபிடியில் சிக்கினுல் அவை பெரிய கயிறுகளாகி அறுக்க முடியாதனவாகவும், பெருவெள்ளமாகவும் அணைகடந்து

அடக்க முடியாதனவாகவும் பெரிய மரங்களாகி கோடாரி கொண்டு வெட்ட முடியாதனவாகவும் மாறிவிடுகின்றன. சிறுபிள்ளைகள் முதலில் கடதாசியிற்றான் புகைக்கப் பழகுகின்றனர். அதேபோன்று இங்கு தீய பழக்கம், அங்கு ஒரு சிற்றின்பம், இங்கு ஒரு அளவு மீறிய இன்பம் இவை இறுதியில் மனிதனை அடிமையாக்கி விடுகின்றன. எவனும் நல்லவனாகவோ அன்றேல் தீயவனாகவோ அவனவன் செயலுக்கேற்றவாறு மாறிக்கொண்டே போகிறான். நல்ல மனிதன் என்றோ, தீயமனிதன் என்றோ இவ்வுலகில் வந்து பிறந்தவர் எவருமில்லை. நல்ல மனிதன் என்பவன் தனது தீய சார்புகளினின்று தன்னை விடுவிக்க நாளுக்கு நாள் எத்தனிப்பவன். தீயமனிதனே தன்னைத்திருத்த, தன்னை விடுவிக்க மறுப்பவன் நல்ல மனிதன் என்ற பெயரெடுக்க பெரும் சாதனைகளைச் சாதிக்க வேண்டுமெனச் சிலர் எண்ணுகின்றனர். அது சரியல்ல, திறமையுடனும், புத்திக்கூர்மையுடனும் சிறு காரியங்களைச் செய்வதிலும் தான் அது தங்கியிருக்கிறது.

# கருத்துக் குவியல் 17

## சந்தேகப் பேர்வழிகள்

- ஆண்களா
- பெண்களா

?

உங்கள் கருத்துக்களை உடனே எழுதி அனுப்புங்கள்

# வாசகர் பூங்கா

**அருமருந்து** — விதி பற்றிய மதியீனமான கருத்துகளுக்கு தெளிவான, ஆக்கபூர்வமான சிந்திக்கற்பால பல தெரிவுகளைத் தந்த நானே உனக்கு என் பாராட்டுகள். வாழ்க்கை பற்றி சிந்தனைக்குகந்த ஜோண் கார்டோசாவின் கட்டுரை பிரமாதம் மொத்தத்தில் 'நான்' சஞ்சிகை அறிவுக்கும் மனதுக்கும் ஒரு அருமருந்தென்றால் மிகையாகாது.

— அ. ஜசிந்தா,
அல்வாய்,

**'நான்' ஆ 'நாம்' ஆ?** — நானே! நீ 'நான்' என்று சொல்லாமல் 'நாம்' என்று சொன்னால் என்ன?

— ராஜாராம்,
அக்கரைப்பத்தனை.

**வரவேற்பு** — சமுதாய மயக்கிகள் (தோமஸ் அமலதாஸ்) எனும் கருத்துச் சுடர் வரவேற்கத்தக்கதாக அமைந்திருந்தது.

— பேணடேத்,
தென்னங்கும்புர.

**சவுக்கடி** — சென்ற இதழ் விதி விதி என்பது நொண்டிச் சாட்டுக் கூறிக்கொண்டு தம் வாழ்வையும் பிறர் வாழ்வையும் வீணாக்கிக் கொண்டிருக்கும், சமுதாயத்தினருக்கு நல்ல சவுக்கடியாக இருந்தது.

— பத்மா லெனட்,
பலாலி.

**நல்வரவு** — நீல கானம் போல நீடுழி வாழும் நானே! சூரியனைப் போல உலகிற்கு அறிவுக் கதிர் கொடுக்கும் நானே! அமுதும் தேனும் போல மதிவிதி, உளவிபற் தேர்வு, சோதிட வாழ்வு விதி விசுவசிப்பு போன்ற சுவையான கருத்துக்களைத் தந்த நானே! உம் வரவு எம்மிடையே என்றும் நல் வரவாகுக!

— பீலிப்தேவிகா,
புங்குடுதீவு-10

*With Best Compliments from:*

# Sri Murugan's

94, Colombo Street,
KANDY.

*With Best Compliments from:-*

## *Jayanthy's*

WHOLESALE & RETAIL
DEALERS IN TEXTILES

**106, Colombo Street,**
KANDY.

Dial: 2464.

*With Best Compliments from:-*

## LATHA JEWELLERS

**No: 27, Kotugodella Vidiya,**
**KANDY.**

Dial: 3833.

*Printed by: Bravi Press, 247, D. S. Senanayake Vidiya, Kandy.*